**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், ஏற்காடு.**
**முன்னிலை – திரு. இரா. இளஞ்செழியன், பி.ஏ., எல்.எல்.பி.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், ஏற்காடு.**
**2026–ம் ஆண்டு ஜூலை திங்கள் 31–ம் நாள் வெள்ளிக்கிழமை**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 55/2022**
**(CNR.NO.TNSA21–000287–2022)**

| | | |
|---|---|---|
| புகார்தாரர் | – | அரசுக்காக,<br>காவல் ஆய்வாளர்,<br>ஏற்காடு காவல் நிலையம்,<br>**கு.எண். 297/2020** |
| எதிரி | – | பொன்னுசாமி, த/பெ. தீர்த்தகிரி(60)<br>பாரக்கடை, சேட்டுக்காடு, வாழவந்தி,<br>ஏற்காடு, சேலம் மாவட்டம். |
| குற்றம் | – | U/s. 25(1B)(a) 3r/w Arms Act. |
| தீர்வு | – | முடிவாக, எதிரி மீது 25(1B)(a ) 3 r/w Arms Act–ன் கீழ் குற்ற சாட்டானது சந்தேகத்திற்கு அப்பாற்ப்பட்டு அரசு தரப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை. எனவே, இவ்வழக்கில் நீதிமன்றத்திற்கு ஏற்பட்டுள்ள சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி **பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் 271(1)–ன் கீழ்** விடுதலை செய்து உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கானது குற்றவியல் நீதிமன்றம் எண். V, சேலத்தில் கடந்த 26.07.2021–ம் தேதியன்று ஆண்டுப்பட்டிகை வழக்கு

எண்.348/2021 கோப்பிற்கு எடுக்கப்பட்டு பின்னர் இந்நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டு கடந்த 04.05.2022–ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு குற்றமுறையீடுபவர் தரப்பில் கற்றறிந்த குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை (1) அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ரமேஷ், அவர்களும் ஆஜராகியும் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுவரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## தீர்ப்புரை

இவ்வழக்கு எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை கு.வி.மு.ச. பிரிவு 173(2)–ன் படி தாக்கல் செய்ததன் அடிப்படையில் எழுந்த வழக்காகும்.

| வ. எண். | விளக்கம் | விபரங்கள் | |
|---|---|---|---|
| 1 | சம்பவம் நடந்த நாள் | 29.04.2020 | |
| 2 | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | 29.04.2020 | |
| 3 | எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் |
| | | 29.04.2020 | 19.05.2020 |
| 4 | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 19.05.2021 | |
| 5 | கு.வி.மு.ச. பிரிவு.281–ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | 16.03.2023 | |
| 6 | கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள் | C.M.P. No.71 of 2026 – Allowed – 05.02.2026.<br>C.M.P. No.812 of 2025 – Allowed – 17.07.2026. | |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா.1 | 20.06.2023 | 06.05.2026 |
| | | அ.சா.2 | 04.07.2023 | 18.05.2026 |
| | | அ.சா.3 | 06.03.2024 | 06.03.2024 |
| | | அ.சா.4 | 06.03.2024 | 06.03.2024 |
| | | அ.சா.5 | 28.05.2024 | 28.05.2024 |
| | | அ.சா.6 | 19.06.2025 | -- |
| | | அ.சா.7 | 31.07.2025 | -- |
| | | அ.சா.8 | 18.09.2025 | 09.07.2026 |
| | | அ.சா.9 | 22.01.2026 | 17.07.2026 |
| 8 | எதிரியிடம் குற்றம் குறித்து BNSS பிரிவு 351(1) (ஆ)ன் கீழ் வினவிய நாள் | 28.01.2026 | | |
| 9 | எதிரி மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | பிடியாணை வழங்கப்பட்ட நாள் | பிடியாணை திரும்ப பெறப்பட்ட நாள் | |
| | | -- | -- | |
| 10 | வழக்கு தீர்ப்புக்காக ஒத்தி வைக்கப்பட்ட நாள் | 31.07.2026 | | |
| 11 | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 31.07.2026 | | |

**Judicial Form No:61**

**Complainant** : Inspector of Police, Yercaud Police station

**Accused** : Ponnusamy, S/o. Theerthagiri (60),

**Offence** : **U/s. 25(1B)(a) 3 r/w Arms Act.**

**Finding** : **Accused are found not Guilty.**

**Sentence** : முடிவாக, எதிரி மீது 25(1B)(a ) 3 r/w Arms Act-ன் கீழ் குற்ற சாட்டானது சந்தேகத்திற்கு அப்பாற்ப்பட்டு அரசு தரப்பால் நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், எனவே இவ்வழக்கில் நீதிமன்றத்திற்கு ஏற்பட்டுள்ள சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி **பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் 271(1)-ன் கீழ்** விடுதலை செய்து உத்தரவிடப்படுகிறது.

**Property** : **CP.No.17/2025**

**ஒற்றைக்குழல் துப்பாக்கி.**

| S.No | Name | Father's/Husband Name | Caste or race | Occupation | Residence | Age |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1. | பொன்னுசாமி | தீர்த்தகிரி | -- | -- | பாரக்கடை, ஏற்காடு தாலுக்கா, சேலம் மாவட்டம். | 60 |

| Occurrence | Complaint | Apprehension or appearance | Release on bail | Commence ment of trial | Close of Trial | Sentence or order | Explanation of delay |
|---|---|---|---|---|---|---|---|
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 29.04.2020 | 29.04.2020 | 29.04.2020 | 18.11.2016 | 16.03.2023 | 28.01.2026 | 31.07.2026 | Nil |

2) <u>**அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்—**</u>

கடந்த 29.04.2020—ம் தேதி காலை சுமார் 06.00 மணிக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் காவல் உதவி ஆய்வாளர்திரு. ஆர். ரகு, அக்காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. மோகன், தலைமை காவலர் திரு. காண்டீபன் மற்றும் தலைமை காவலர் திரு. செல்வம், மற்றும் வாழவந்தி கிராம நிர்வாக அலுவலர் திரு.எஸ்.புகழேந்தி மற்றும் வாழவந்தி கிராம உதவியாளர் திரு.ராஜமாணிக்கம் ஆகியோருடன் சேர்ந்து ரோந்து பணிக்காக சேட்டுக்காடு, பாறைக்காடு தனது வீட்டிற்கு அருகே உள்ள ஆட்டுக் கொட்டகையின் கிழக்கு பக்கமாக உள்ள மூங்கில் தட்டிக்குள் மேலே குறிப்பிட்ட எதிரியாகிய நீர் அரசின் அனுமதி இல்லாமல் ஒற்றை குழல் நாட்டுத்துப்பாக்கி வைத்திருந்த குற்றத்திற்காக எதிரி மீது **ச/பி 25(1B)(a) 3 r/w Arms Act**.—ன் கீழ் ஏற்காடு காவல் ஆய்வாளர்

குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3) எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் பிரிவு 207 BNS Act–ன் படி எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டு எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் வழங்கிய பின்னர் எதிரிகளின் மீது சட்டபிரிவு **25(1B)(a) 3 r/w Arms Act–ன்** கீழ் குற்றச்சாட்டுகள் குறித்து விளக்கி வினவிய போது எதிரி குற்றத்தை மறுத்து கூறினார். எனவே அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு வழிவகை செய்யப்பட்டது.

4) அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.9 சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ13 வரையிலான சான்றாவனங்களும், அ.சா.ஆ.பொ.1 சான்று பொருளாக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5) <u>அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்–</u>**

**அ.சா.1 ரகு** தனது சாட்சியத்தில் கடந்த 2020–ம் ஆண்டு ஏற்காடு காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்த போது 29.04.2020–ம் தேதி காலை 06.00 மணியளவில் மதுவிலக்கு மற்றும் கள்ளத்துப்பாக்கி சம்மபந்தமாக கண்காணிக்க வேண்டி தன்னுடன், ஏற்காடு காவல் தனிப்பிரிவு சிறப்பு உதவி ஆய்வாளர் மோகன், தலைமைக்காவலர்

காண்டீபன்,தலைமைக்காவலர் செல்வம் ஆகியோர்களுடன் வாழவந்தி பகுதியில் கண்காணித்து சென்றபோது, தனக்கு கிடைத்த இரகசியத்தகவலின் படி சேட்டுக்காடு பாறைக்கடையில் தீர்த்தகிரியின் மகன் பொன்னுசாமி என்பவர் அவரது வீட்டின் அருகே ஆட்டுக்கொட்டகையில் நாட்டுத்துப்பாக்கி பதுக்கி வைத்திருப்பதாக தகவல் கிடைத்து அதன்படி வாழவந்தி கிராம நிர்வாக அலுவலர் புகழேந்தி மற்றும் கிராம உதவியாளர் இராஜமாணிக்கம் ஆகியோர்களை அழைத்துக்கொண்டு காலை 07.00 மணியளவில் மேற்படி பொன்னுசாமியின் வீட்டருகே சென்றபோது, பொன்னுசாமி வீட்டின் முன்பாக நின்றுகொண்டிருந்தார் என்றும், அவரது வீட்டின் அருகேயுள்ள ஆட்டுக்கொட்டகையை சோதனை செய்தபோது கிழக்கு பக்கமாக உள்ள மூங்கில் தட்டிக்குள் ஒரு ஒற்றைக்குழல் நாட்டுத்துப்பாக்கி மறைத்து வைக்கப்பட்டிருந்தது என்றும், மேற்படி பொன்னுசாமியை விசாரிக்க, அவர் தான் நாட்டுத்துப்பாக்கி பதுக்கி வைத்திருந்ததாக ஒப்புக்கொண்டார் என்றும், காலை சுமார் 07.15 மணியளவில் கிராம நிர்வாக அலுவலர் புகழேந்தி மற்றும் கிராம உதவியாளர் இராஜமாணிக்கம் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் ஒற்றைக்குழல் நாட்டுத்துப்பாக்கி–ஒன்று (அதில் துப்பாக்கியின் மொத்த நீளம் – சுமார் 136 செ.மீ இரும்பு பேரலின் நீளம்–93 செ.மீ. துப்பாக்கியின் மரப்பாகத்தின் நீளம் – சுமார் 75 செ.மீ. வெடிமருந்து இடிக்கும் கம்பியின் நீளம் 85.5 செ.மீ) கைப்பற்றினேன் என்றும், பின்பு எதிரி மற்றும் வழக்குச்சொத்துடன்

நிலையம் வந்து இதுசம்மந்தமாக காவல் ஆய்வாளரிடம் தனிஅறிக்கை புகார் அளித்து எதிரி மற்றும் வழக்குச்சொத்தினை காவல் ஆயிவாளரிடம் ஆஜர்படுத்தினேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் தனியறிக்கை புகாரிலுள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், இதுசம்மந்ததமாக காவல் ஆய்வாளர் தன்னை விசாரணை செய்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6). **அ.சா.2 காண்டீபன்** தனது சாட்சியத்தில் கடந்த 29.04.2020–ம் தேதி தான் ஏற்காடு காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிபுரிந்தபோது உதவி ஆய்வாளர் ரகு, சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் மோகன், தலைமைக்காவலர் செல்வம் அவர்களுடன் தானும் சேர்ந்து வாழவந்தி பகுதியில் ரோந்து பணியில் இருந்தபோது, உதவி ஆய்வாளர் ரகு என்பவருக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் பாறைக்கடையை சேர்ந்த பொன்னுசாமி என்பவரிடம் துப்பாக்கி இருப்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் தாங்கள் அங்கு சென்று பார்ததபோது, பொன்னுசாமியின் வீட்டின் அருகேயுள்ள ஆட்டுக்கொட்டகையில் ஒரு ஒற்றைக்குழல் நாட்டுத்துப்பாக்கி இருந்தது என்றும், அதை உதவி ஆய்வாளர் ரகு கிராம நிர்வாக அலுவலர், கிராம உதவியாளர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார் என்றும், இதுசம்மந்தமாக காவல் ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்று சாட்சியம்

அளித்துள்ளார்.

7). **அ.சா.3 எம். மோகன்** தனது சாட்சியத்தில் இதற்கு முன்பாக கடந்த 29.04.2020–ம் தேதி ஏற்காடு காவல் நிலையம் தனிபிரிவு சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது காலை 06.00 மணிக்கு ஏற்காடு உதவி ஆய்வாளர் திரு. ரகு மற்றும் தலைமை காவல் திரு. காண்டீபன் , திரு. செல்வம் ஆகியோருடன் மதுவிலக்கு மற்றும் கள்ளதுப்பாக்கி சம்பந்தமாக சேட்டுக்காடு தீர்த்தகிரி மகன் பொன்னுசாமி என்பவர் கள்ளதுப்பாக்கி வைத்திருப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் படி வாழவந்தி கிராம நிர்வாக அலுவலர் புகழேந்தி, உதவியாளர் ராஜமாணிக்கம் ஆகியோருடன் கேட்டுக்காடு பாறைகடையில் உள்ள எதிரியின் வீட்டில் சோதனை செய்வதாக சொல்லி சோதனை செய்தபோது அவரது ஆட்டு பட்டியில் கள்ளத்துப்பாக்கி ஒன்றை வைத்திருந்தார் என்றும், உதவி ஆய்வாளர் திரு. ரகு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து துப்பாக்கியை 07.45 மணியளவில் கைப்பற்றினார் என்றும், துப்பாக்கியையும், எதிரியையும் நிலையம் கொண்டு வந்து ஆய்வாளரிடம் தனி அறிக்கை மூலம் ஒப்படைத்தோம் என்று, இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

8). **அ.சா.4 செல்வம்** தனது சாட்சியத்தில் கடந்த 29.04.2020–ம்

தேதி ஏற்காடு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது ஏற்காடு காவல் உதவி ஆய்வாளர் ரகு மற்றும் தனிப்பிரிவு சிறப்பு உதவி ஆய்வாளர் மோகன் மற்றும் தைமை காவலர் காண்டீபன் உட்பட தானும் மதுவிலக்கு கள்ளதுப்பாக்கி ஆகியவற்றை கண்காணிப்பதற்காக ரகசிய தகவலின் படி வாழவந்தி பகுதியில் சென்றிருந்தோம் என்றும், அப்போது சேட்டுக்காடு,பாறைக்கடை தீர்த்தக்கிரி மகன் பொன்னுசாமி என்பவரின் வீட்டின் முன்பு ஆட்டு கொட்டகையில் நாட்டு துப்பாக்கி பதுக்கி வைத்திருப்பதாக கிடைத்த தகவலின் பேரில் வாழவந்தி கிராம நிர்வாக அலுவலர் புகழேந்தி மற்றும் உதவியாளர் ராஜமாணிக்கம் ஆகியோருடன் காலை 07.00 மணிக்கு பொன்னுசாமியின் வீட்டின் அருகே சென்றபோது வீட்டின் அருகே ஆட்டு கொட்டகையில் கிழக்கு பக்கமாக மூங்கில் தட்டிக்குள் ஒற்றைக்குழல் நாட்டுதுப்பாக்கி இருந்தது என்றும், அதை பொன்னுசாமியிடம் விசாரிக்க துப்பாக்கியை மறைத்து வைத்திருந்ததை ஒப்புக்கெண்டார் 7.15 மணிக்கு கிராம நிர்வாக அலுவலர் புகழேந்தி மற்றும் உதவியாளர் ராஜமாணிக்கம் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் துப்பாக்கியை கைப்பற்றி மற்றும் எதிரியுடனும் நாட்டு துப்பாக்கியுடனும் காவல் உதவி ஆய்வாளர் தனி அறிக்கையுடன் நிலையம் அழைத்து வந்து காவல் ஆய்வாளர் பார்வைக்கு 09.00 மணிக்கு

விசாரணைக்கு வைக்கப்பட்டது என்றும், இது சம்மந்தமாக 29.04.2020-ம் தேதி ஏற்காடு காவல் ஆயவாளர் தன்னை விசாரித்தார் என்றும், இந்த வழக்கு சம்பந்தமாக நீதிமன்ற உத்தரவின் படி கைப்பற்றப்ட்ட துப்பாக்கியை தடய அறிவியல் துறைக்கு ஒப்புவித்து அறிக்கை வாங்கி வந்து நீதிமன்றத்தில் ஒப்டைத்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

9). **அ.சா.5 புகழேந்தி** தனது சாட்சியத்தில் 2020-ம் ஆண்டு தான் வாழவந்தியில் கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்தபோது 29.04.2020-ம் தேதியன்று ஏற்காடு காவல் நிலையத்திலிருந்து பெலக்காடு, பாறைப்பட்டியில் பொன்னுசாமி என்பவர் வீட்டருகே நாட்டு துப்பாக்கி கண்டறியப்பட்டதாகவும், எனவே வழக்கு விசாரணைக்கு உதவியாக தன்னை அழைத்ததால் தானும் தனது உதவியாளரும் சுமார் காலை 07.00 மணிக்கு சென்றோம் என்றும், அப்போது பொன்னுசாமி வீட்டில் சோதனை செய்த போது ஆடு, மாடு கட்டும் கொட்டாயில் ஒற்றை குழல் நாட்டு துப்பாக்கி இருந்ததை தங்கள் முன்னிலையில் உதவி ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார் என்றும், தானும் உதவி ஆய்வாளரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும், பொன்னுசாமியை விசாரித்து காவல் நிலையம் அழைத்து வந்தார் என்றும், எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதுல் வாக்குமூலம் அளித்தார் என்றும், அதில் தாங்கள் இருவரும் சாட்சி

கையொப்பம் செய்தோம் என்றும், மீண்டும் விசாரணைக்காக காலை 11.00 மணிக்கு சம்பவ இடம் அழைத்துச்சென்று தங்கள் முன்னிலையில் விசாரித்து பார்வை மகஜரும், மாதிரி வரைபடமும் தயார் செய்தார்கள் அதில் தானும் உதவி ஆய்வாளரும் சாட்சி கையொப்பம் செய்தோம் என்றும், இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் தன்னை விசாரணை செய்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

10). **அ.சா.6 ராஜமாணிக்கம்** தனது சாட்சியத்தில் சுமார் 05 வருடங்களுக்கு முன்பு காவல் நிலையத்திலிருந்து துப்பாக்கி பிடித்துக்கொண்டு வந்திருக்கும் வழக்கு சம்மந்தமாக விசாரணைக்கு சாட்சியாக இருக்குமாறு அழைத்தார்கள் என்றும், தானும் கிராம நிர்வாக அலுவலர் புகழேந்தி என்பவரும் காவல் நிலையம் சென்றோம் என்றும், துப்பாக்கியை எங்கிருந்து எடுத்தார்கள் என்று தனக்கு தெரியாது என்றும், பின்பு காவல் நிலையத்தில் கையெழுத்து வாங்கினார்கள் என்றும், தன்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் மற்றும் பார்வை மகஜரிலுள்ள 2வது கையொப்பம் தன்னுடையது தான் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

11). **அ.சா.7 காமராஜன்** தனது சாட்சியத்தில் ஆஜர் எதிரியை தெரியும் என்றும், தனக்கு வழக்கு சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாது என்றும், ஆஜர் எதிரியின் மீது என்ன வழக்கு தாக்கல்

செய்துள்ளார்கள்என்ற விவரம் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

12). **அ.சா.8 ஆனந்தன்** தனது சாட்சியத்தில் கடந்த 29.04.2020-ம் தேதியன்று ஏற்காடு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பொறுப்பில் இருந்தபோது அன்றைய தேதியில் ஏற்காட்டில் பணிபுரிந்த காவல் உதவி ஆய்வாளர் திரு. ரகு என்பவர் காலை 09.00 மணிக்கு ஒரு தணி அறிக்கையுடன், கைப்பற்றுதல் மகஜருடன் எதிரி பொன்னுசாமி, த/பெ. தீர்த்தகிரி, பாறைக்கடை, சேட்டுக்காடு என்பவரை தன்னிடம் SBML நாட்டுத்துப்பாக்கியுடன் ஆஜர் செய்தார் என்றும், அவர் அளித்த தனியறிக்கையினை பெற்று தான் நிலைய குற்ற எண். 297/2020, சட்டபிரிவுகள் 25(1)(a) ARMS Act-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றும், பின்னர் அவருடன் வந்த சாட்சிகள் வாழவந்தி கிராம நிர்வாக அதிகாரி புகழேந்தி, கிராம உதவியாளர் ராஜாமாணிக்கம் என்பவர் முன்னிலையில் காலை 09.30 மணிக்கு எதிரி பொன்னுசாமியை விசாரிக்க அவர் தானாக முன் வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் காலை 09.30 – 10.30 மணி வரை ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதியான பின்னர் சாட்சிகள் ரகு, தலைமை காவலர் காண்டிபன், செல்வம், கிராம நிர்வாக அலுவலர் புகழேந்தி, கிராம உதவியாளர் ராஜாமணிக்கம் ஆகியோருடன் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டு சம்பவ இட சாட்சி

காமராஜ், வாழவந்தி கிராம நிர்வாக அலுவலர் புகழேந்தி, கிராம உதவியாளர் ராஜாமணிக்கம் ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தாயர் செய்தேன் என்றும், மேற்படி சம்பவ இட சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், பின்னர் எதிரியுடன் நிலையம் வந்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன் என்றும், பின்னர் கைப்பற்றப்பட்ட நாட்டுத்துப்பாக்கியை படிவம் 95–ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றும், பின்னர் கைப்பற்றபட்ட துப்பாக்கியை ரசாயான பரிசோதனைக்காக அனுப்ப வேண்டி கனம் நீதிமன்றத்திற்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து தலைமை காவலர் செல்வம் என்பவர் மூலமாக பரிசோதனை கூடத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றும், பின்பு எதிரி மீது வழக்கு தொடர்வதற்காக முன் அனுமதி வேண்டி மாவட்ட ஆட்சியருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து மாவட்ட ஆட்சியரின் முன் அனுமதி பெற்றேன் என்றும், பின்னர் வழக்கின் சட்டபிரிவுகளை 25(1)(a) ARMS Act லிருந்து 3 r/w 25(1)(B)(a) ARMS Act–ன் கீழ் மாறுதல் செய்து நீதிமன்றத்தில் சட்டபிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்தேன். பின்பு துப்பாக்கியை பகுப்பாய்வு செய்த தடய அறிவியல் வல்லுநர் திரு. சிந்தா சாகுல் அமிது என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஆய்வறிக்கையின் நகல் பெற்றேன். பின்பு வழக்கு சொத்தான துப்பாக்கியை நீதிமன்றத்திலிருந்து பெற்று சென்னை தடயவியல் துறையில் ஆஜர் படுத்தி பரிசோதனைக்கு பின்பு மீண்டும்

அதனை பெற்று வந்து நீதிமன்றத்தில் ஒப்படைத்த செல்வம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு பணியிட மாறுதல் வந்ததால் வழக்கு நாட்குறிப்பினை தனக்கு பின்னால் வந்த காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

13). **அ.சா.9 சசிகலா** தனது சாட்சியத்தில் கடந்த 11.03.2021-ம் தேதி முதல் ஏற்காடு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் சேர்ந்து நிலுவை வழக்கு கோப்புகளை பார்வையிட்டதில் ஏற்காடு காவல் நிலைய குற்ற எண்.297/2020, ச/பி. 25(1)(a) ARMS Act வழக்கானது தனக்கு முன் இருந்த காவல் ஆய்வாளர் அவர்களால் புலன் விசாரணை முடிக்கப்பட்டு மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் வழக்கு தொடர்வு அனுமதி பெறுவதற்காக கடிதம் கொடுக்கப்பட்டு நிலுவையில் இருந்தது என்றும், பின்னர் இவ்வழக்கில் வழக்கு தொடர்வு அனுமதி பெற்று 01.05.2021-ம் தேதி இவ்வழக்கின் எதிரி மீது 25(1)(B)(a) ARMS Act-ன் கீழ் கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

14). இந்நிலையில் எதிரிக்கு பாதகமான அரசு தரப்பு சாட்சியங்கள் குறித்து Sec.351(1)(ஆ)-ன் படி வினவியபோது எதிரி அதனை மறுத்து பொய் சாட்சியம் என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என கூறியதால் எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு இருதரப்பு வாதம்

கேட்கப்பட்டது.

15). எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆராய்ந்து தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

**16) தீர்வு:–**

அ.சா–1 தனது சாட்சியத்தில், கடந்த 2020–ஆம் ஆண்டு ஏற்காடு காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்த போது 29.04.2020–ஆம் தேதி காலை 06.00 மணியளவில் மதுவிலக்கு மற்றும் கள்ள துப்பாக்கி சம்பந்தமாக சிறப்பு உதவி ஆய்வாளர் மோகன், தலைமை காவலர் காண்டீபன், செல்வம் ஆகியோர்களுடன் வாழவந்தி பகுதியில் கண்காணிக்க சென்ற போது தனக்கு கிடைத்த ரகசிய தகவலின் படி எதிரி அவரது வீட்டின் அருகேயுள்ள ஆட்டுக்கொட்டகையில் நாட்டுத்துப்பாக்கி பதுக்கி வைத்திருப்பதாக தகவல் கிடைத்ததாகவும், அதன்படி வாழவந்தி கிராம நிர்வாக அலுவலர் புகழேந்தி மற்றும் கிராம உதவியாளர் இராஜமாணிக்கம் ஆகியோரை அழைத்துக் கொண்டு காலை 07.00 மணியளவில் எதிரியின் வீட்டருகே சென்ற போது, எதிரி நின்று கொண்டிருந்ததாகவும் ஆட்டுக்கொட்டகையை சோதனை செய்தபோது கிழக்குப் பக்கமாக உள்ள மூங்கில் தட்டிக்குள் ஒரு ஒற்றைகுழல் நாட்டு

துப்பாக்கி மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும், எதிரியை விசாரிக்க தான் நாட்டுத்துப்பாக்கி வைத்திருந்தது ஒப்புக்கொண்டதாகவும், காலை சுமார் 07.15 மணியளவில் கிராம நிர்வாக அலுவலர் புகழேந்தி மற்றும் கிராம உதவியாளர் ராஜமாணிக்கம் ஆகியயோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியதாகவும், வெடி மருந்து இடிக்கும் கம்பியினை கைப்பற்றியதாகவும், பின்னர் எதிரியை மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து காவல் ஆய்வாளரிடம் தனியறிக்கை அளித்து வழக்கு சொத்தினை ஆஜர்படுத்தியதாகவும், தனி அறிக்கையில் உள்ள கையெழுத்து தன்னுடையது என்றும், காவல் ஆய்வாளர் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

16.1). அ.சா–1–ன் சாட்சியமானது, வழக்கு சம்பவ இடத்தில் தான் வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டது குறித்து தனி அறிக்கையில் உள்ள சங்கதிகளை ஒத்துரைக்கும் விதமாக உள்ளது என்றும் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக உள்ளது என்றும் இந்நீதிமன்றம் கருதுகின்றது.

17). அ.சா–2 தனது சாட்சியத்தில், 29.04.2020–ம் தேதி வாழவந்தி பகுதியில் அ.சா.1, அ.சா.3, அ.சா.4 ஆகியயோருடன் பணியில் இருந்த போது அ.சா.1–ற்கு எதிரியிடம் துப்பாக்கி இருப்பதாக கிடைத்த ரகசிய தகவலின் படி எதிரியின் வீட்டிற்கு சென்று பார்த்த போது எதிரியின் வீட்டு அருகே

உள்ள ஆட்டுக்கொட்டகையில் ஒரு ஒற்றைக் குழல் நாட்டுதுப்பாக்கி இருந்ததாகவும், அதை அ.சா−5 மற்றும் அ.சா−6 முன்னிலையில் கைப்பற்றியதாகவும் சாட்சியளித்துள்ளார்.

17.1). தனது குறுக்கு விசாரணையில், "**கடந்த 29.04.2020−ம் தேதி காலை 08.00 மணியளவில் உதவி ஆய்வாளருக்கு தகவல் கிடைத்ததாகவும், சம்பவ இடத்திற்கு 12.00 − 01.00 மணிக்கு சென்றதாகவும்**" சாட்சியமளித்துள்ளார்.

17.2). அ.சா−2−ன் சாட்சியத்தினை ஆராய்கையில், வழக்கு சம்பவ இடத்திற்கு சென்ற நேரம் குறித்தும் வழக்கு சொத்து கைப்பற்றியது குறித்தும் முரண்பாடாக சொல்லியுள்ளது வழக்கு சம்பவ குறித்து நம்பத்தகுந்ததாக இல்லை என்றும், அ.சா.2−ன் சாட்சியமானது ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை என்றும் இந்நீதிமன்றம் கருதுகின்றது.

18). அ.சா−3, தனது சாட்சியத்தில், 29.04.2026−ம் தேதியன்று ஏற்காடு காவல் உதவியாளர் ரகு மற்றும் காண்டீபன், செல்வம் ஆகியோர் மதுவிலக்கு மற்றும் கள்ள துப்பாக்கி சம்பந்தமாக கிடைத்த ரகசிய தகவலின் படி வாழவந்தி கிராம நிர்வாக அலுவலர் புகழேந்தி, உதவியாளர் ராஜமாணிக்கம் ஆகியோருடன் எதிரியின் வீட்டில் சோதனை செய்தபோது ஆட்டுப்பட்டியில் கள்ளத்துப்பாக்கி ஒன்றை வைத்திருந்தார் என்றும்,

அதனை உதவியாளர் திரு.ரகு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து 7.45 மணியளவில் கைப்பற்றியதாகவும், சாட்சியமளித்துள்ளார்.

19). அ.சா.4, அ.சா.1–ன் சாட்சியத்தினை ஒத்துரைக்கும் விதமாக சாட்சியமளித்துள்ளார். அ.சா–4–ன் சாட்சியமானது வழக்கு சம்பவத்தினை குறித்து ஏற்றுக் கொள்ளத்தக்கதாக உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகின்றது.

20). அ.சா.5 தனது சாட்சியத்தில், கடந்த 29.04.2020–ம் தேதி யன்று ஏற்காடு காவல் நிலையத்தில் இருந்து எதிரியின் வீட்டு அருகே நாட்டு துப்பாக்கி கண்டறியப்பட்டதாகவும், வழக்கு விசாரணைக்கு உதவியாக தன்னை அழைத்ததால் தானும் தனது உதவியாளரும் சுமார் காலை 07.00 மணிக்கு சென்றதாகவும், அப்போது எதிரி வீட்டில் சோதனை செய்த போது ஆடு, மாடு கட்டும் கொட்டாயில் ஒற்றை குழல் நாட்டு துப்பாக்கி இருந்ததை தங்கள் முன்னிலையில் உதவி ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றியதாகவும், இருவரும் சாட்சி கையொப்பம் செய்ததாகவும், எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாகவும், அதில் சாட்சி கையொப்பம் செய்ததாகவும், பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், அதில் தானும் உதவி ஆய்வாளரும் கையொப்பம் செய்ததாகவும், இது சம்பந்தமாக போலீசார் விசாரணை

செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

20.1). தனது குறுக்கு விசாரணையில், "**வழக்கு சம்பந்தமாக எவ்வளவு நேரத்திற்கு யார் தகவல் சொன்னது என்றால் காவல் நிலையத்தில் இருந்து காலை 06.00 மணிக்கு செல்போன் மூலம் தகவல் சொன்னதாகவும், துப்பாக்கியை எங்கிருந்து கைப்பற்றினார்கள் என்றால் மாட்டு கொட்டகை பரம்பில் இருந்து ஆகும். போலீசார் என்னை விசாரித்த போது மேற்படி விவரத்தை நான் தெரிவித்தேன் என்றால் ஆமாம்**" என்று சாட்சியமளித்துள்ளார்.

20.2). அ.சா.5–ன் சாட்சியத்தினை ஆராய்கையில், வழக்கு சம்பவம் குறித்து தனக்கு காலை 06:00 மணிக்கு தகவல் தெரிவித்ததாகவும், வழக்கு சொத்து மாட்டு கொட்டகையின் பரம்பில் இருந்து கைப்பற்றியதாகவும், போலீஸ் விசாரணையில் அது குறித்து சொல்லியதாகவும், சாட்சியமளித்துள்ளார். காலை 6:00 மணிக்கு ரகசிய தகவல் கிடைத்து அதன் பேரில் சம்பவ இடம் சென்று ஆட்டுக் கொட்டகையில் இருந்து வழக்கு சொத்துக்களை கைப்பற்றியதே அரசு தரப்பு வழக்காகும். அதற்கு மாறாக அ.சா.5 காலை 6:00 மணிக்கு தனக்கு தகவல் கிடைத்ததாகவும், மாட்டு கொட்டகை பரம்பிலிருந்து கைப்பற்றியதாகவும், முரணாக சாட்சியமளித்துள்ளது வழக்கு சொத்தானது

முறையாக கைப்பற்றப்பட்டது என்பது குறித்து சந்தேகத்தை ஏற்படுத்தும் விதமாக உள்ளது என்றும், வழக்கு சம்பவத்தில் வழக்கு சொத்து கைப்பற்றியது குறித்து நம்பத்தகுந்ததாக இல்லை என்றும் இந்நீதிமன்றம் கருதுகின்றது.

21). அ.சா–6 மற்றும் அ.சா–7 அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக சாட்சியமளித்ததால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதப்பட்டுள்ளார். எனவே அவர்களது சாட்சியமானது ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லை என நீதிமன்றம் கருதுகின்றது.

22). அ.சா.8 தனது சாட்சியத்தில் காலை 09.00 மணிக்கு அ.சா–1 அளித்த தனியறிக்கை அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், பின்னர் அ.சா–5, அ.சா–6 முன்னிலையில் காலை 09.30 மணிக்கு எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தினை பதிவு செய்ததாகவும், பின்னர் சம்பவயிட சாட்சிகள் விசாரணை செய்து பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்ததாகவும், கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தினை படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்ததாகவும், வழக்கு சொத்தினை ரசாயன பரிசோதனைக்காக அனுப்பி வைத்தது குறித்தும், வழக்கு தொடர்வதற்கு முன் அனுமதி வேண்டி வேண்டுகோள் கடிதம் கொடுத்து முன் அனுமதி பெற்றது குறித்தும்

வழக்கில் சட்ட பிரிவு மாறுதல் செய்து அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியமளித்துள்ளார்.

23.1). அ.சா–8 தனது குறுக்கு விசாரணையில் "**எங்கு வைத்து எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது என்றால் காவல் நிலையத்தில் வைத்து பெறப்பட்டது என்றும், வழக்கு சொத்தினை யார் எடுத்தார்கள் என்றால் எதிரி எடுத்து வந்து காவல் உதவி ஆய்வாளரிடம் ஒப்படைத்ததாக என்னிடம் கூறினார் என்றும், வழக்கு சொத்தினை கைப்பற்றிய பின்னிட்டு தான் எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.1 ஆட்டுகொட்டகையில் சோதனை செய்து, அவரே வழக்கு சொத்தினை எடுத்தார் என்று சொல்வது தவறு என்றால் சரிதான். கைப்பற்றுதல் மகஜரில் வழக்கு சொத்து எந்த இடத்தில் இருந்து எடுக்கப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்**" என்று சாட்சியமளித்துள்ளார்.

23.2). அ.சா.8–ன் சாட்சியத்தினை ஆராய்கையில் எதிரியிடம் குற்ற ஒப்புதல் வாக்குமூலமானது காவல் நிலையத்தில் வைத்து பெறப்பட்டுள்ளது என்பது தெரியவருகின்றது. அ.சா.1 எதிரி காவல் நிலையம் அழைத்து வரும் முன்னரே வழக்கு சொத்தினை கைப்பற்றியதாக சொல்லியுள்ளார். வழக்கு சொத்தானது எதிரியின் ஒப்புதல்

வாக்குமூலத்தின் அடிப்படையில் கைப்பற்றப்படவில்லை என்பது உறுதியாகின்றது. கைப்பற்றுதுல் சாட்சிகளும் வழக்கு சொத்து கைப்பற்றியது குறித்து முரணாக சாட்சியமளித்ததால் வழக்கு சொத்தானது எதிரியிடமிருந்து தான் கைப்பற்றப்பட்டது என்பது குறித்து அ.சா.8 முறையாக புலன் விசாரணை செய்யப்படவில்லை என்றும், அரசு தரப்பு மேற்படி சங்கதி நிரூபணம் செய்யவில்லை என்றும் நீதிமன்றம் கருதுகின்றது.

24). அ.சா.9 தனது சாட்சியத்தில் வழக்கில் வழக்கு தொடர அனுமதி பெற்று எதிரியின் மீது இறுதியறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

24.1). மேற்கண்ட விவாதங்களின் அடிப்படையில் வழக்கு சொத்து எதிரியின் வசத்திலிருந்து எதிரிக்கு சொந்தமான இடத்தில் கைப்பற்றப்பட்டதாக அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யவில்லை என்று நீதிமன்றம் கருதுகின்றது.

25). முடிவாக, வழக்கு சொத்தானது எதிரிக்கு சொந்தமான இடத்தில் இருந்து கைப்பற்றப்பட்டது என்பது குறித்து அரசு தரப்பானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யாததால், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து பிரிவு **25(1B)(a) 3 r/w ARMS Act.**

குற்றச்சாட்டில் இருந்து விடுதலை செய்து பாரதி குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் பிரிவு 271(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

26). இவ்வழக்கில் **CP. No. 17/2022–ல்** உள்ள வழக்கு சொத்தான 136 செ.மீ. நீளம் சுமார் 93 செ.மீ. துப்பாக்கியின் மரப்பாகத்தின் நீளம் சுமார் 75 செ.மீ. வெடி மருந்து இடிக்கும் கம்பியின் நீளம் சுமார் 85.5 செ.மீ. கொண்ட தற்போது ஏற்காடு காவல் நிலைய இடைக்கால பொறுப்பில் உள்ள SBML நாட்டுத்துப்பாக்கியை மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு **காவல் கண்காணிப்பாளர், சேலம் வாயிலாக சேலம் மாவட்ட ஆயுதப்படை பிரிவில்** ஒப்படைக்க வேண்டுமாய் உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026–ம் ஆண்டு ஜூலை திங்கள் 31–ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஓம்/–.இரா.இளஞ்செழியன்,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**ஏற்காடு.**

**அரசு தரப்பு சாட்சிகள்–**

| | | |
|---|---|---|
| **அ.சா.1** | **–** | **திரு. ரகு** |
| **அ.சா.2** | **–** | **திரு. காண்டீபன்** |
| **அ.சா.3** | **–** | **திரு. எம்.மோகன்** |

**அ.சா.4 – திரு.செல்வம்**

**அ.சா.5 – திரு.புகழேந்தி**

**அ.சா.6 – திரு. ராஜமாணிக்கம்**

**அ.சா.7 – திரு. காமராஜன்**

**அ.சா.8 – திரு. ஆனந்தன்**

**அ.சா.9 – திரு. சசிகலா**

Judicial Form No:68

| S.No of the exhibit | Description of the exhibits | Date when the exhibit was filed in the case | How marked | By whom filed | Remarks |
|---|---|---|---|---|---|
| 1. | புகார் வாக்குமூலம் | 29.09.2022 | அ.சா.1 | அரசு தரப்பு | அசல் |
| 2. | பார்வை மகஜரிலுள்ள 1–வது கையொப்பம் | 24.10.2025 | அ.சா.8 | அரசு தரப்பு | அசல் |
| 3. | கோவிந்தசாமி என்பவரது விபத்துபதிவேட்டுடன் கூடிய காய்ச்சான்றிதழ் | 13.11.2025 | அ.சா.10 | அரசு தரப்பு | அசல் |
| 4. | லட்சுமி என்பவரது விபத்துபதிவேட்டுடன் கூடிய காய்ச்சான்றிதழ் | 13.11.2025 | அ.சா.10 | அரசு தரப்பு | அசல் |
| 5. | சின்னாகவுண்டர் என்பவரது விபத்துபதிவேட்டுடன் கூடிய காய்ச்சான்றிதழ் | 13.11.2025 | அ.சா.10 | அரசு தரப்பு | அசல் |
| 6. | வெங்கடாசலம் என்பவரது விபத்துபதிவேட்டுடன் கூடிய காய்ச்சான்றிதழ் | 13.11.2025 | அ.சா.10 | அரசு தரப்பு | அசல் |
| 7. | தியாகு என்பவரது விபத்துபதிவேட்டுடன் கூடிய காய்ச்சான்றிதழ் | 13.11.2025 | அ.சா.10 | அரசு தரப்பு | அசல் |
| 8. | முதல் தகவல் அறிக்கை | 08.05.2026 | அ.சா.11 | அரசு தரப்பு | அசல் |
| 9. | பார்வை மகஜர் | 08.05.2026 | அ.சா.11 | அரசு தரப்பு | அசல் |
| 10. | மாதிரி வரைப்படம் | 08.05.2026 | அ.சா.11 | அரசு தரப்பு | அசல் |
| 11. | விபத்துடன் கூடிய கருத்துரை | 08.05.2026 | அ.சா.12 | அரசு தரப்பு | அசல் |

**<u>எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** **...இல்லை.**

**<u>அரசு தரப்பில் சான்றுபொருட்கள்</u>**

**1). அ.சா.பொ.1 – CP.No.17/2025**

**ஒற்றைக்குழல் துப்பாக்கி.**

**ஒம்/-.இரா.இளஞ்செழியன்,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**ஏற்காடு.**

**<u>குறிப்பு–</u>**

1. தீர்ப்பு பற்றிய விபரம் காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. இவ்வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையிலிருந்தார்.
3. இவ்வழக்கின் சாட்சிகள் யாரும் 3 வாய்தாவிற்கு மேல் விசாரணைக்காக நிறுத்தி வைக்கப்படவில்லை.